## முத்தமிழறிஞர் கலைஞர்

# பெருந்தலைவர் காமராஜருக்கு அளித்த மரியாதை வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும்!

## பேரவையில் வரலாற்று ஆதாரங்களை முன்வைத்து முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு காங்கிரசுக்கு தக்க பதிலடி!

**சென்னை, செப். 3 -**

**பெருந்தலைவர் காமராஜர் உடலை மெரினா கடற்கரையில் நல்லடக்கம் செய்ய, கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசு அனுமதி மறுத்ததாக பேரவையில் முன் வைக்கப்பட்ட குற்றச் சாட்டுக்கு, அவைக்குறிப்புகளையும் வரலாற்று ஆதாரங்களையும் முன்வைத்து முன்னாள் அமைச்சரும், திருச்சுழி சட்டமன்ற உறுப்பினருமான தங்கம் தென்னரசு நேற்று முன்தினம் பேரவையிலேயே பதிலடி கொடுத்தார்.**



குறிப்பாக, காமராஜர் மறைந்தபோது அவருடைய இல்லத்துக்கு உடனடியாகச் சென்று கலைஞர் மரியாதை செலுத்தியது தொடங்கி அவரது உடலை அரசு மரியாதையுடன் ராஜாஜி மண்டபத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்க ஏற்பாடு செய்தது. பின்னர் கிண்டியில் காந்தி மண்டபத்திற்கு அருகே நினைவிடம் அமைக்க நடவடிக்கை எடுத்தது வரை நடந்த நிகழ்வுகளை தங்கம் தென்னரசு விரிவாக எடுத்துரைத்தார்.

நேற்று முன்தினம், காங்கிரஸ் சட்டமன்றக் குழுத் தலைவர் தாரகை கத்பர்ட், கலைஞர் முதலமைச்சராக இருந்த திமுக ஆட்சிக் காலத்தில் காமராஜர் உடலை மெரினாவில் அடக்கம் செய்ய அனுமதி மறுக்கப்பட்டது என்ற தகவலை பேரவையில் பதிவு செய்திருந்தார்.

இதற்கு நேற்று முன்தினம் பதிலளித்த தங்கம் தென்னரசு பேசியதாவது:-

வரலாற்றிலும், இந்தப் பேரவையிலும் பிழையான அல்லது உண்மைக்கு மாறான செய்திகள் பதிவாகிவிடக் கூடாது என்ற அடிப்படையில் விளக்கம் அளிப்பது எனது கடமையாகும். பெருந்தலைவர் காமராஜர் 1975ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் தேதி காலையில் இயற்கை எய்தினார். அவர் மரணமடைந்த செய்தியைக் கேள்விப்பட்டவுடன், அன்றைக்கு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் உடனடியாக அவருடைய இல்லத்திற்கு விரைந்து சென்று மரியாதை செலுத்தினார். அப்போது அங்கே இருந்த காங்கிரஸ் கட்சித் தலைவர்கள், அவருடைய உடலை தேனாம்பேட்டையில் இருக்கக்கூடிய காங்கிரஸ் மைதானத்தில் அடக்கம் செய்ய வேண்டும் என்று விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

### முழு அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது!

அப்போது அங்கேவந்த கலைஞர், பெருந்தலைவர் காமராஜர் என்பவர் ஏதோ காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மாத்திரம் கிடையாது; அவர் ஒரு பெரிய தேசியத் தலைவர். அவருக்கு உரிய முறையில் நாம் அடக்கம் செய்து, அவர் இடத்தில் நினைவிடம் கட்ட வேண்டும் என்று வலியுறுத்தினார். அதன்படி, காமராஜரின் உடலை ராஜாஜி மண்டபத்துக்கு கொண்டு சென்று, முழு அரசு மரியாதையுடன் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்க ஏற்பாடு செய்ததுடன், கிண்டியில் காந்தி மண்டபத்திற்கு அருகே அவரது நினைவிடம் அமைப்பதற்கான நடவடிக்கைகளையும் கலைஞர் மேற்கொண்டார்.

இதற்கான முக்கியமான வரலாற்றுச் சான்றாக, அன்றைய மேலவையின் எதிர்க்கட்சித் தலைவரும் காமராஜரின் நெருங்கிய நண்பருமான ராஜாராம் நாயுடு அவையில் பேசிய உரையை தங்கம் தென்னரசு சுட்டிக்காட்டினார்.

காமராசரை இழந்த துயரில் கழக அரசு பங்கு கொண்டது குறித்து, காமராசரினுடைய நெருங்கிய நண்பரும் மேலவையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவருமான ராஜாராம் நாயுடு அப்போது மேலவையிலே பேசியது:

**காமராசர் மறைந்ததுபற்றி என்னால் எங்கு பேசினாலும் இதைச் சொல்லாமல் இருக்க முடியாது. நமது மாநில அரசை நடத்தும் முதலமைச்சர் கலைஞர், கல்வி அமைச்சரும் மற்ற அமைச்சர்களும் அங்கு வந்து, அவர்களுடைய சகோதரர்களில் ஒருவர் இறந்துவிட்டதைப்போல அந்த இடத்தில் தோற்றமளித்தார்களே தவிர, மற்றொரு கட்சியினுடைய தலைவர் இறந்தார் என்று அவர்கள் நினைத்ததாகத் தெரியவில்லை. எங்களைக் கட்டிப்பிடித்து முதலமைச்சர் கலைஞர்அன்று துக்கம் தெரிவித்ததும், அழுததும் என்னுடைய உயிர் உள்ள அளவும் மறக்க முடியாது. அவ்வளவு பாச உணர்ச்சியை அவர்கள் காட்டினார்கள். தமிழ்நாடு அரசாங்கத்திடமிருந்து அன்று அரசு மரியாதையை நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை. தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் அவருடைய பிரேதத்தைப் பார்வைக்கு வைத்து, அங்கேயேஎரித்துநினைவுச்சின்னம் கட்டுவது என்றுதான் முதலில் முடிவு செய்திருந்தோம்.**

**சிலர் ராஜாஜி ஹாலுக்குக் கொண்டு போய் வைக்க வேண்டும், முதலமைச்சரிடத்திலே கேளுங்கள் என்று சொன்னார்கள். இதை எப்படிக் கேட்பது என்று யோசித்துக் கொண்டிருந்த நேரத்தில், அதே வினாடியில் முதலமைச்சர் கலைஞர், காமராசர் வீட்டுக்குள் வந்துவிட்டார்கள். வந்ததும் முதல் வேலையாக, இங்கே கூட்டத்தைச் சமாளிக்க முடியாது, உடனே ராஜாஜி ஹாலுக்குக் கொண்டுபோக வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்காத அளவிற்கு ஏதோ கனவு கண்டதைப்போல சொன்னார்கள். எங்கள் மனதை எப்படித் தெரிந்து கொண்டார்கள் என்றே எங்களுக்குத் தெரியவில்லை. எனக்கும், என்னு டைய சகாக்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர்களுக்கும் இதற்கெல்லாம் என்ன கைம்மாறு செய்வது என்றே புரியவில்லை. பிறகு ராஜாஜி ஹாலுக்கு வந்து எவ்வாறு வைக்க வேண்டும் என்று அதனையெல்லாம் சரி செய்து மேடை போட்டுக் கொண்டிருக்கக்கூடிய நேரத்தில், அங்கேயே மந்திரிசபை கூடியது என்ற வகையில் எல்லா அமைச்சர்களும் அங்கே வந்துவிட்டார்கள்.**

**அவரை எங்கே வைப்பது என்பதற்கு காந்தி மண்டபத்திற்குப் பக்கத்தில் இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதே கணத்தில் முடிவு செய்தது மாத்திரமல்லாமல், அன்று இரவே முதலமைச்சர் கலைஞர் அவருடைய வண்டியிலேயே என்னையும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி காரியதரிசியையும் அழைத்துக் கொண்டு, மழை பெய்து கொண்டிருக்கும்போதே இரவு 8 மணிக்கு முதலமைச்சர் கலைஞர், பொதுப்பணித் துறை அமைச்சரும் அந்த இடத்திற்குச் சென்றோம். அவர்களே செய்திருக்கலாம், எங்களை அழைத்துச் சென்றிருக்க வேண்டியதில்லை; இருந்தாலும் எங்களையும் அழைத்துக் கொண்டு அந்த இடத்தில், அந்த இரவில் வெளிச்சமில்லை, கார்களையெல்லாம் திருப்பி நிறுத்தி விளக்கைப்போட்டு, இடத்தைத் தேர்ந்தெடுத்து, அன்றிரவே அங்குள்ள மரங்களையெல்லாம் அகற்றி, இரவெல்லாம் முதலமைச்சர் அங்கேயே தூக்கமில்லாமல் இருந்து ஏற்பாடுகளையெல்லாம் செய்தார்கள். இதற்கெல்லாம் என்ன கைம்மாறு செய்வது என்று எங்களுக்குத் தெரியவே இல்லை. கட்சியைப் பற்றி நான் எண்ணவில்லை. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் என்றுமே இதை மறக்க முடியாது. நான் உள்ள அளவும் அதை மறக்க முடியாது எனக் கூறியுள்ளார்.**

இவ்வாறு ராஜாராம் நாயுடு சொன்னது இன்றைக்கும் மேலவையினுடைய அவைக்குறிப்புகளிலே இருக்கிறது. தலைவர் கலைஞரை தொடர்ந்து, தளபதி ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலகட்டங்களிலெல்லாம் பெருந்தலைவர் காமராஜருக்கு எவ்வளவு சிறப்பு களைச் செய்தார்கள் என்பதை நாம் தொடர்ந்து பல்வேறு விஷயங்களாகச் சொல்லிக்கொண்டே இருக்கலாம்.

மெரினா கடற்கரைச் சாலைக்கு காமராஜர் பெயர் சூட்டியதிலிருந்து, இன்று அவையில் நாம் காணும் காமராஜரின் திருவுருவப் படம் வரையிலும் தி.மு.க.வும், தலைவர் கலைஞரும் காமராஜருக்கு அளித்த மரியாதை வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும்.

முன்னதாக மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்தப் படத்தை அவையில் திறந்து வைத்த அந்தக் காலகட்டத்தில்கூட, அந்த படத்தின் கீழ் இடம்பெற்ற உழைப்பே உயர்வு தரும் என்ற வரிகளை எழுதித் தந்தவர் தலைவர் கலைஞர்தான். காமராஜரின் உழைப்பையும் பெருமையையும் மதித்து, அதை தலைமுறைகள் நினைவு கூரும் வகையில் பதிவு செய்தவர் கலைஞர்.

எனவே, அன்று தொடங்கி, பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாளை கல்வி வளர்ச்சி நாளாக சட்டமாகக் கொண்டு வரக்கூடிய அந்த நிலை வரை, எண்ணற்ற விஷயங்களை நான் அடுக்கிக்கொண்டே செல்லலாம். இருந்தாலும், நேரத்தின் அருமை கருதி என்றைக்கும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கு மிகுந்த மரியாதையோடு, எல்லாச் சிறப்பு களையும் செய்யும் வகையில் செயல்பட்டவர் நம்முடைய முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞரும், திராவிட முன்னேற்றக் கழக அரசும், நம்முடைய திராவிட மாடல் அரசின் முதலமைச்சராக இருந்த தளபதி மு.க. ஸ்டாலின்தான்.

இவ்வாறு அவர் பேசினார்.

---

## மேயர்கள் உங்கள் ஆட்கள் இருக்கிறார்கள் என்கிறார்கள்

# புதிய ஆட்சியில் பணம் ஒதுக்காததால் திட்டங்களை செயல்படுத்த முடியவில்லை என்று சென்னை மாநகராட்சி கவுன்சிலர்கள் கருப்புடையில் வந்தார்கள்!

## சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி துணைத் தலைவர் கே.என்.நேரு பதில்!

*சென்னை, செப்.3-*

*சட்டப்பேரவையில் பொதுப்பணித்துறை அமைச்சர் பேசுகையில் மேயர்கள் எல்லாம் உங்கள் ஆட்கள் தான் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டு பேசிய போது, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கே.என்.நேரு பேசுகையில் பணம் ஒதுக்காததால் திட்டங்கள் செயல்படுத்த முடியவில்லை என்று சென்னை மாநகராட்சி கவுன்சிலர்கள் கருப்பு உடையில் வந்தார்கள் என்ற குறிப்பிட்டார்.*



*இதுகுறித்து முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது:-*

*குடி தண்ணீருக்காக ஆங்காங்கே பெண்கள் குடத்தை தூக்கிக் கொண்டு செல்கிறார்கள் என்று பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார். அந்தத் திட்டம் குறித்து சொன்னால், நீண்ட நேரமாகும். கிட்டத்தட்ட 2,500 MLD கொடுத்த இடத்தில், 4,000 MLD புதிய திட்டங்கள் மூலமாக குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, குடி தண்ணீர் பற்றியெல்லாம் பிரச்சினை இல்லை.*

*மேலும், மேயர்கள் உங்கள் ஆட்கள் இருக்கிறார்கள்; எல்லோரும் உங்களுடைய ஆட்கள் இருக்கிறார்கள் என்று சொன்னார். எந்தத் திட்டமும், புதிய ஆட்சி வந்த பிறகு செயல்படுத்துவதற்கான அதிகாரம் இல்லை; பணம் தரவில்லை; செயல்படுத்தவில்லை; அப்படியே ஸ்தம்பித்து போயிருக்கிறது. கடந்த வாரம் கூட, சென்னை மாநகராட்சியில் எங்களுக்கு எந்தப் பணமும் sanction செய்யவில்லை என்று கருப்பு உடை அணிந்து councillors சென்றிருக்கிறார்கள். நான் திருச்சியை வைத்து சொல்கிறேன். அப்போது, முதலமைச்சர் இருக்கிறார், அவருடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று நினைத்தேன்.*

*ஏற்கெனவே சாலைக்காக ரூ.392 கோடி ஒதுக்கப்பட்டது; அது நிறுத்தப்பட்டிருக்கிறது. 100 ஏக்கர் ஏரியை சரி செய்வதற்காக ரூ.34 கோடி கொடுக்கப்பட்டது. அதுவும் நிறுத்தப்பட்டிருக்கிறது.*

*எனவே, பணிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன; நடைபெறவில்லை.*

*நீங்கள் உடனடியாக உங்களுடைய துறைச் செயலாளரை அழைத்து, எந்தெந்தப் பணிகளெல்லாம் நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் கேளுங்கள். கேட்டு உடனடியாக நடத்த சொல்லுங்கள்.*

*கவுன்சிலரோ, மேயரோ, அரசு சொல்கிற திட்டத்தை செயல்படுத்த தவறினால், இரண்டு முறை பார்த்து, ஆணையருக்கே அந்த அதிகாரம் இருக்கிறது; அரசின் சார்பில் உடனடியாக அதை செய்யலாம் என்று சொல்வதற்கு ஆணையருக்கே அதிகாரம் இருக்கிறது; அதனை செய்ய சொல்லலாம். எனவே, உங்கள் மேயர் இருக்கிறார்; உங்கள் கவுன்சிலர் இருக்கிறார் என்று சொல்வதில்லை. நீங்கள் அரசாங்கம் மேலாண்மை செய்வதற்கு அனைத்து அதிகாரங்களும் உங்களிடம் இருக்கிறது. அதை செய்யுங்கள்.*

*இவ்வாறு முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு பேசினார்.*





கும்பகோணம் மாநகராட்சி மாமன்ற கூட்டத்தில் தமிழகத்தில் அதிகரித்துவரும் விலைவாசி உயர்வைக் கண்டுக்கொள்ளாத த.வெ.க. அரசைக் கண்டித்து 30க்கும் மேற்பட்ட தி.மு.க. உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றாத காங்கிரஸ் மேயரை கண்டித்து துணை மேயர் சு.ப.தமிழழகன் தலைமையிலான தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

---

## த.வெ.க. ஆட்சியின் கடுமையான விலைவாசி உயர்வை கண்டித்து

# கும்பகோணம் மாநகராட்சி மாமன்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றாதது ஏன்?

## காங். மேயரை கண்டித்து தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு!

*தஞ்சாவூர், செப். 3-*

*கும்பகோணம் மாநகராட்சி மாமன்ற கூட்டத்தில் தமிழக வெற்றிக் கழகம் ஆட்சியில் விலைவாசி கடுமையாக உயர்ந்துள்ளதை கண்டித்து திமுக துணை மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கொண்டு வந்த கண்டன தீர்மானத்தை காங்கிரஸ் மேயர் ஏற்றுக் கொள்ளாததால் திமுக மாமன்ற உறுப்பினர்கள் அனைத்து தீர்மானங்களையும் நிராகரித்து வெளிநடப்பு செய்தனர்.*

*கும்பகோணம் மாநகராட்சி மன்ற சாதாரண கூட்டம் கும்பகோணம் கோசி. மணி மாமன்ற வளாகத்தில் இரா.துரை மாமன்ற கூட்ட அரங்கில் மேயர் சரவணன் தலைமையிலும், துணை மேயர் சு.ப.தமிழழகன் மற்றும் ஆணையர் சுதா ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.*

*மாமன்றத்தில் 34 தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டு கூட்டம் தொடங்கியது. கூட்டத்தில் மாநகராட்சி துணை மேயர் சு.ப.தமிழழகன் தூய்மை பணியாளர்கள் பேராட்டத்தை பற்றியும், குப்பைகளை பொது மக்கள் தரம் பிரித்து தருவது தொடர்பாக மேயரிடமும், ஆணையரிடமும் வினா எழுப்பினார்.*

*அப்போது குறுக்கிட்ட த.வெ.க கட்சியை சார்ந்த உறுப்பினர் ஆதிலட்சுமி நேபாள விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தீர்மானம், விபத்தில் சிக்கிக் கொண்டவர்களை பாதுகாப்பாக மீட்டு வர நடவடிக்கை எடுத்த தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானமும் கொண்டு வந்தார். இதனை ஏற்றுக் கொள்ளாத திமுக மாமன்ற உறுப்பினர்கள் இரங்கல் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதாகவும், அதே நேரத்தில் தமிழக அரசின் செயல்பாடு திருப்தியாக இல்லாததால் அதனை நிராகரிப்பதாகவும் தெரிவித்ததால். த.வெ.க. உறுப்பினருக்கும், தி.மு.க. உறுப்பினர்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. தொடர்ந்து திமுக துணை மேயர் சு.ப.தமிழழகன் நேபாள விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தீர்மானம் வாசித்து அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.*

*அதனைத் தொடர்ந்து தி.மு.க மாமன்ற உறுப்பினர்கள் 30க்கும் மேற்பட்டோர் தமிழக வெற்றிக் கழக 100 நாள் ஆட்சியில் அரிசி, பருப்பு, சீனி உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய பொருட்களும் கடுமையாக விலை உயர்ந்துள்ளதாக கண்டித்து கண்டன தீர்மானம் கொண்டு வந்தனர்.*

*இதற்கு தி.மு.க. மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மேடையை தட்டி ஆரவாரம் செய்தனர். 45 உறுப்பினர்கள் கொண்ட மாமன்றத்தில் 30க்கும் மேற்பட்ட தி.மு.க. உறுப்பினர்கள் மற்றும் காங்கிரஸ் கட்சியை சார்ந்த அய்யப்பன் என்ற உறுப்பினரும், சி.பி.ஐ.எம். கட்சியை சார்ந்த உறுப்பினர் செல்வம் ஆகியோர் ஆதரவு தெரிவித்து கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை மேயர் சரவணன் ஏற்காமல் இரங்கல் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றியாதாக அறிவித்தார். ஆனால் தமிழக அரசுக்கு எதிராக கண்டன தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. அரசுக்கு எதிராக எப்படி தீர்மானம் நிறைவேற்ற முடியும் என்று கேள்வி எழுப்பினார். அதற்கு பெரும்பான்மையான உறுப்பினர்கள் தீர்மானம் கொண்டு வரும் பொழுது அதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டியது மேயரின் பொறுப்பு. மேயர் இதனை செய்யாததால் இதை கண்டித்து திமுக மாமன்ற உறுப்பினர்கள் முழக்கங்கள் எழுப்பியதுடன் அங்கு கடும் வாக்குவாதம் செய்தனர். இதனால் பரபரப்பு நிலவியது. கண்டன தீர்மானத்தை மேயர் ஏற்றுக் கொள்ளாததால் கூட்டத்தில் வைக்கப்பட்ட 34 தீர்மானங்களையும் நிராகரிப்பதாக கூறி தி.மு.க. மாமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். இந்நிலையில் மேயர் சரவணன் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டதாக அறிவித்தார்.*

*இது குறித்து மாமன்ற உறுப்பினர்கள் தெரிவித்ததாவது காங்கிரஸ் கட்சி மேயர் சரவணன் அவர்களை தி.மு.க உறுப்பினர்கள் தான் மேயராக தேர்வு செய்தோம், அதே நேரத்தில் மாமன்ற விதிகள்படி அதிகப்படியான உறுப்பினர்கள் ஆதரவு தெரிவிக்கும் தீர்மானம் மட்டுமே மன்றத்தில் நிறைவேற்றப்படும். ஆனால் காங்கிரஸ் கட்சியின் மேயரோ தன்னிச்சையாக செயல்படுகிறார். தி.மு.க. உறுப்பினர்கள் மட்டும் இல்லாமல் த.வெ.க கட்சியின் ஆட்சியில் பங்கு வகிக்கும் அவருடைய காங்கிரஸ் கட்சியை சேர்ந்த உறுப்பினர் அய்யப்பன் மற்றும் சி.பி.ஐ.எம். கட்சியை சேர்ந்த செல்வம் ஆகியோரும் விலைவாசி உயர்வுக்கு எதிரான கண்டன தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்த தீர்மானத்தை கூட நிறைவேற்றாமல் ஜனநாயக கடமையை மீறுவதாக குற்றம் சாட்டினர்.*



ஈரோடு தெற்கு மாவட்ட மாணவரணி சார்பில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தனசேகரன் தலைமையில் நீட் தேர்வுக்கு எதிராக உயர்நீத்த அனிதாவின் நினைவு தினத்தையொட்டி ஈரோடு தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்வில் மாநகர அமைப்பாளர் ஸ்ரீதர், துணை அமைப்பாளர்கள் சி.ஏ.கார்த்திகேயன், மோ.சிவா (எ) மணிகண்டன், மெஹ்ராஜ், எஸ்.பி.சதீஷ்குமார், கவின், நல்லசிவம், உள்ளிட்ட மாணவரணியினர் கலந்து கொண்டனர்.